## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
## கோயமுத்தூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
## (05.12.2015 முதல் 09.12.2015)

**அறிக்கை எண் 97-2015** **தேதி: 04.12.2015**

**மாநிலத்தின் கடந்த வார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 27°செ முதல் 31°செ ஆகவும், இரவு நேர வெப்பநிலை 22°செ முதல் 25°செஆகவும் பதிவானது. கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 16°செ முதல் 20°செஆகவும், இரவு நேர வெப்பநிலை 10°செ முதல் 13°செ ஆகவும் பதிவானது. தமிழ் நாட்டில் பல இடங்களில் மிதமான முதல் கன மழை காணப்பட்டது.

**எதிர்பார்க்கப்படும் வானிலை கோயமுத்தூர் (05.12.2015 முதல் 09.12.2015)**

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 28°செ முதல் 29°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 27°செ முதல் 28°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 84 முதல் 90 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 80 முதல் 88 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 8 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் வடகிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| தேதி | மழை (மி.மீ) | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | மேக மூட்டம் (ஆக்டா) | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | காற்றின் வேகம் (கி.மீ/ மணி) | காற்று வரும் திசை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 05.12.15 | 4 | 29 | 28 | 7 | 84 | 80 | 8 | வடகிழக்கு |
| 06.12.15 | 4 | 29 | 28 | 7 | 84 | 80 | 8 | வடகிழக்கு |
| 07.12.15 | 2 | 29 | 28 | 7 | 84 | 80 | 8 | வடகிழக்கு |
| 08.12.15 | 8 | 28 | 27 | 8 | 90 | 88 | 8 | வடகிழக்கு |
| 09.12.1 | 10 | 28 | 27 | 8 | 90 | 88 | 8 | வடகிழக்கு |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| *5* | | | | | | | | |

**வேளாண் அறிவுரை**

- ✓ பருவ மழை காலங்களில் தொடர்ந்து மழை பெறப்படுவதாலும், புதிதாக முளைத்து வரும் புற்களை கால்நடைகளுக்கு கொடுப்பதாலும் செம்மறிஆடு, ஆடு, மாடு மற்றும் கறவைமாடுகளுக்கு குடற்புழு நீக்கம் செய்யவும்.
- ✓ தற்போது நிலவும் வானிலை திராட்சையில் அடிச்சாம்பல் நோய் தாக்க வாய்ப்புள்ளது. இதை கண்காணித்து 1 சதம் போர்டோ கலவை அல்லது 0.25 சதம் காப்பர் பூஞ்சாணக்கொல்லி தெளிக்கவும்.
- ✓ அதிக காற்றின் ஈரப்பதம் எதிர்பார்க்கப்படுவதால் நெற்பயிரில் குலைநோய் தாக்க வாய்ப்புள்ளது. இதனை கண்காணித்து தகுந்த பயிர் பாதுகாப்பு செய்யவும்.
- ✓ அதிக மண் ஈரம் மற்றும் காற்றின் ஈரப்பதம் காரணமாக மஞ்சளில் இலைப்புள்ளி நோய் அதிகமாக தென்படும். இதனை கட்டுப்படுத்த ஒரு எக்டருக்கு 500 கிராம் கார்பன்டசிம் மருந்தினை 500 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.
- ✓ எதிர்பார்க்கப்படும் மழை மற்றும் வேகமான காற்றின் காரணமாக வாழை மரங்கள் சாய்வதை தவிர்க்க ஐந்து மாதங்களுக்கு மேலுள்ள வாழை மற்றும் கரும்பு பயிர்களுக்கு முட்டு கொடுக்கவும்.

**குறுஞ்செய்தி**

- ✓ பருவ மழை காலங்களில் தொடர்ந்து மழை பெறப்படுவதாலும், புதிதாக முளைத்து வரும் புற்களை கால்நடைகளுக்கு கொடுப்பதாலும் செம்மறிஆடு, ஆடு, மாடு மற்றும் கறவைமாடுகளுக்கு குடற்புழு நீக்கம் செய்யவும்.

பேராசிரியர் மற்றும் தலைவர்
வேளாண் காலநிலைஆராய்ச்சி மையம்
த.நா.வே.ப.கழகம், கோவை.